பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 06 | ஞாயிற்றுக்கிழமை | 19.01.2025 | அதிர்வு 170

இ.போ.ச. பஸ்ஸை வழிமறித்து

## சாரதி, நடத்துனர் மீது மாணவர் குழு தாக்குதல்

நுவரெலியாவில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸை நானுஓயா – கிளாரண்டன் பகுதியில் வழிமறித்த மேலதிக வகுப்புக்குச் செல்லும்

05▶



# இலங்கையின் சிறந்த நண்பனாக இந்தியா தொடர்ந்தும் செயற்படும்

### யாழில் தேசிய பொங்கல் விழாவில் தூதுவர் சந்தோஷ் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கையின் சிறந்த நண்பனாகவும் நிபந்தனையற்றதும் உறுதியுமான அயல் நாடாகவும் இந்தியா தொடர்ந்தும் செயற்படும்."

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

06▶



# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தாயகத்தில் தொடரும் கையெழுத்துப் போராட்டம்!

(எஸ். ரகுதீஸ்)

யாழ். நெல்லியடி பொதுச் சந்தை முன்பதாக போராளிகள் நலன்புரிச் சங்கத்தினரால் நேற்று கையெழுத்துப் பெறும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது

இதில் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வே.வேந்தன் ஆகியோரும் கலந்து கையெழுத்திட்டனர்.




தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழு கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் அரசமைப்பு உருவாக்க விடயங்கள் தொடர்பில் கட்சியின் விவகாரங்களைக் கையாள்வதற்கு ஏழு பேர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

அரசமைப்பு உருவாக்க விடயங்களில் தமிழ் தேசியக் கட்சிகளை ஒன்றுப்படுத்தி, ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் பெயரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில முன்னெடுப்புகளை அண்மைக் காலத்தில் ஆரம்பித்திருந்தார். அது தொடர்பான சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் பங்குபற்றியிருந்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் முன் முயற்சியில் இடம்பெறும் சந்திப்பில் சிறிதரன் பங்கு பற்றியமை நேற்றைய மத்திய குழு கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. ஆயினும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் முயற்சி தொடர்பில் தீர்மானம் எதுவும் தமிழரசு கட்சி எடுக்கவில்லை. ஆக, அரசமைப்பு

05▶

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கை முடக்கி நாங்கள் போராடுவோம்

## அநுர அரசுக்குச் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை




(எஸ்.ரகுதீஸ்)

"எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகளை ஆட்சியாளர்கள் விடுவிக்க வேண்டும். இல்லாவிட்டால் வடக்கு, கிழக்கை ஸ்தம்பிக்க வைக்கக் கூடிய ஒரு அறவழிப் போராட்டத்தை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நெல்லியடி பொதுச் சந்தை முன்பதாக நேற்று முன்னெடுக்கப் பட்ட கையெழுத்துப் போராட்டத்தின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் தொடர்ந்து ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாமல் காணப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷ காலம் தொடக்கம் இன்றுவரை அது நீண்டுகொண்டே இருக்கின்றது.

நல்லாட்சி என்று வந்த நாசமாய் போன ஆட்சியிலும் அரசியல் கைதிகளுக்கு எந்தவிதமான தீர்வையும் பெற்றுக் கொடுக்காதவர்கள், ரணில் விக்கிரமசிங்க எதையோ வெட்டி வீழ்த்தப்போகின்றார் என்று ஆதரவு கொடுத்தவர்கள், சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு கொடுத்தவர்கள் என எல்லோருமே அரசியல் கைதிகள் விடயத்தில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது வேதனைக்குரிய விடயம்.

இலங்கை வரலாற்றில் ஆயுதப் புரட்சியை ஏற்படுத்திய ஜே.வி.பியினருக்கு இரு தடைவைகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இதனால்தான் இன்று அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறியிருக்கின்றார்கள்.

ஆகவே, இவ்வாறு ஆயுதப் புரட்சியை நடத்தி அதில் விடுதலை பெற்றவர்கள் இன்று ஆட்சிப்பீடத்தில் இருக் கின்றபோது, தமிழ் இளைஞர்கள் மாத்திரம் பயங்கர வாதிகளாக்கப்பட்டுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.

நாட்டின் தற்போதைய நீதி அமைச்சர், அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்ற கருத்து மிகவும் மோசமானது. தமிழ் அரசியல் கைதிகளில் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும். தண்டனை விதிக்கப்படாதவர்களை வழக்குகளில் இருந்து விடுதலை செய்ய முடியும்.

அரசு தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குத் தயங்குகின்றது. சிங்கள மக்கள் கொந்தளிப்பார்கள் எனப் பயப்படுகின்றது. எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன் னர் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் , வடக்கு, கிழக்கை ஸ்தம்பிக்க வைக்கக்கூடிய ஒரு அறவழிப் போராட்டத்தை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் இணைந்து வடக்கு, கிழக்கு முழுவதும் சிவில் நிர்வாகத்தை ஸ்தம் பிக்க வைக்கக்கூடிய போராட்டத்தை முன்னெடுக்க வேண் டும்.

ஆகவே, இந்த ஆட்சியாளர்கள் கையெழுத்துப் போராட் டத்தை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்காவிட்டால், பரந்து பட்ட போராட்டத்துக்கான அறைகூவலை நான் விடுக்கின் றேன்." – என்றார்.



# பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு சபையில் வெள்ளியன்று அனுதாபம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மறைந்த இரா. சம்பந்தனுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 21 முதல் 24 ஆம் திகதி வரை கூடவுள்ளது.

இதன்போது 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக முழு நாளும் ஒதுக்கப்படவுள்ளது.

அதற்கமைய, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ருக்மன் சேனாநாயக்க, ரொஜினோல்ட் பெரேரா, சிறினால் த மெல் மற்றும் மொஹமட் இல்யாஸ் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக அன்றைய தினம் மு.ப. 9.30 முதல் பி.ப. 5.30 வரை ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது எம் பொறுப்பு

## அமைச்சர் சுனில் செனெவி தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைக்குள் இனவாதம் என்ற சொல்லை உச்சரிக்காத அளவுக்கு உங்களின் (தமிழ் மக்களின்) செயற்பாடுகள் அமைந்துள்ளதால் உங்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது எங்களின் பொறுப்பாகும். இதேபோன்றுதான் முழு இலங்கையும் எமது புதிய அரசாங்கம மீது பாரிய எதிர்பார்ப்பில் இருக்கின்ற நிலைமையில் அதனை மறந்து நாம் செயற்படப்போவதில்லை."

– இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனெவி யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார்.

யாழ். தெல்லிப்பழையில் நேற்று நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இலங்கையில் புதியதொரு மாற்றம் வேண்டுமென அனைத்து மக்களும் எமக்கு ஆதரவை வழங்கியிருக்கின்றனர். அத்தகைய மாற்றத்தின் பின்னர் முழு இலங்கையும் பாரிய எதிர்பார்ப்பில் இருக்கின்றது.

குறிப்பாக இங்குள்ள மக்கள் அனைவரும் கடந்த தேர்தலில் எங்களுக்கு வழங்கிய ஆதரவை நாங்கள் மறந்து செயற்பட முடியாது. இந்தப் புதிய அரசாங்கம் தங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக எமக்கு ஆதரவை வழங்கியுள்ளனர்.

அவ்வாறு நாடு முழுவதும் பாரிய மக்கள் ஆணையோடு நாம் ஆட்சிக்கு வந்திருக்கின்றோம். அதிலும் யாழ்ப்பாணத்தில் கூட எமது கட்சியில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை நீங்கள் தெரிவு செய்துள்ளீர்கள்.

அதனூடாக நீங்கள் அனைவரும் மீண்டுமொரு தடவை இலங்கைக்குள் இனவாதம் என்ற சொல்லை உச்சரிக்காத அளவுக்கு எம்மை அழைத்துள்ளீர்கள்.

ஆகையினால் கௌரவமான வாழ்வுக்கான உங்களின் எதிர்பார்ப்பைப் பாதுகாப்பதும் அதற்காகப் பணியாற்றுவதும் எமது பொறுப்பாகும்.

அத்தகைய பொறுப்பை மறந்து நாங்கள் செயற்படப் போவதில்லை. உங்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலையே எமது செயற்பாடுகள் அமையும்." – என்றார்.

# 15,000 மெட்ரிக் தொன் உப்பு இந்தியாவிலிருந்து இறக்குமதி



உப்பு இறக்குமதியை ஆரம்பித்துள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய அடுத்த வாரமளவில் 15,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய முடியுமென கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் சமிலா இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து உப்பு இறக்குமதியை மேற்கொள்வதற்காக 2 இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இந்த இறக்குமதி உப்பை தொழிற்துறையினருக்கு விநியோகிக்கவுள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்காக அண்மையில் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சிறிதரன் எம்.பி. ஊடாக பேச்சுவார்த்தைக்கு இந்தியா செல்கின்றனர் 10 வடக்கு மீனவர்கள்

## நா.வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு

(எஸ்.ரகுதீஸ்)

"நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஊடாக வடக்கு மாகாணத்திலிருந்து 10 பேர் கொண்ட குழு ஒன்று இந்தியாவுக்கு பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கான வழிவகைகளை நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம். கூடிய விரைவில் அது கைகூடலாம்."

– இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கடற்பரப்பில் தமிழ், சிங்கள புத்தாண்டில் இருந்து எமது மக்கள் தொழிலுக்கு செல்லவில்லை. 90 வீதமானோர் இவ்வாறு தொழிலுக்கு செல்லவில்லை. இந்திய இழுவை படகுகளால் அவர்களது வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு எமது மீனவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பிரச்சினைக்கு இரண்டு நாட்டு அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுகின்றோம்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் தமிழ் நாட்டில் நடந்த அயலக மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீனவர் பிரச்சினை தொடர்பில் பேசியிருந்தார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேபோல், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஊடாக வடக்கு மாகாணத்திலிருந்து 10 பேர் கொண்ட குழு ஒன்று இந்தியாவுக்கு பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கான வழிவகைகளை நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம். கூடிய விரைவில் அது கைகூடலாம்,

நாங்கள் உண்டியலை குலுக்கி காசுகளை கொள்ளையடிக்கவில்லை. இந்தியாவில் பேச்சு நடத்தப்போகின்றோம் என்று கூறி உண்டியலில் நிதி சேகரித்தார். ஆனால், எந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை. அந்த பணம் எல்லாம் யார் எடுத்தது?

நாங்கள் சட்டவிரோத மீன்பிடியை நிறுத்துமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றோம். ஆனால், இதுவரை அவ்வாறு நிறுத்தப்படவில்லை. அப்படியானால், சட்டவிரோத மீன்பிடிக்கு அனைவருக்கும் அனுமதி வழங்குங்கள்.

புதிய கடற்றொழில் அமைச்சர் சட்டவிரோத மீன்பிடியை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம். எமது மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்." – என்றார்.




# வருடத்தின் முதல் 15 நாள்களில் வாகன விபத்துகளில் 68 பேர் பலி

வருடத்தின் முதல் 15 நாள்களில் 65 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துகளில் 68 பேர் உயிரிழந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டின் முதல் 15 நாள்களில் 105 பேரும் 2024 ஆம் ஆண்டின் முதல் 15 நாள்களில் 99 பேரும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விவகாரங்களைக் கையாள கட்சியின் சார்பில் எழுவர் குழு நியமிக்கப்பட்டது. இனிமேல் இவ்விடயத்தில் தமிழ் கட்சிகளை கையாளும் நடவடிக்கைகளையும் முன் முயற்சிகளையும் தமிழரசுக் கட்சியே இக்குழு ஊடாக மேற்கொள்ளும் என்ற சாரப்பட்ட கருத்து நேற்றைய கூட்டத்தில் எதிரொலித்தது.

ஆக, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தற்போதைய முன்முயற்சி தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு இதுதான் என்று முடிவு எதுவுமே தமிழரசுக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. அந்த முன் முயற்சி தமிழரசினால் ஒரு பொருட்டாக கருதப்படவில்லை என்ற தோரணையே நேற்றைய கூட்டத்தின் முடிவாக வெளிப்பட்டிருக்கின்றது.

இதனால் வரும் 25ஆம் திகதி இந்த விடயத்தை ஒட்டி கஜேந்திரகுமார் கூட்டும் கூட்டத்துக்கு சிறிதரன் எம்.பி. போய் தமது கட்சியின் நிலைப்பாடு என்று எதனைத் தெரிவிக்க போகிறார் எனத் தெரியவில்லை.

நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் இன்னொரு முக்கிய விடயமும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

அரசமைப்பு உருவாக்க விடயங்கள் மற்றும் ஜனாதிபதியை சந்தித்துப் பேசுதல் போன்ற விவகாரங்களில் பிரத்தியேகமாகத் தனித்து நாடாளுமன்றக் குழு அழைக்கப்பட்டாலேயன்றி, மற்றைய சந்திப்புகளில் எல்லாம் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் வெளிவிவகார துணைச் செயலாளர் என்ற கோதாவில் சட்டத்தரணி சுமந்திரன் ஆகியோர் கட்டாயம் பங்கு பற்ற வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டு தரப்புகள், சர்வதேச பிரதிநிதிகளைச் சந்தித்துப் 'படம் காட்டும்' விடயத்துக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் இயக்குநர் நாயகம் பதவிக்கு ஒருவரைப் பரிந்துரைக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்டத்தில் எதிர்க் கட்சி தரப்புகளின் பிரதிநிதியான சிறிதரன் எம்.பி. அங்கு அரசுத் தரப்போடு சேர்ந்து வாக்களித்து, முடிவை அரசுக்குச் சார்பாக மாற்றியமை தொடர்பில் ஓரிரு வாரங்களுக்கு முன்னர் என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அந்த விவகாரம் நேற்றைய மத்திய குழு கூட்டத்தில் படு சூடாக ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது.

அந்த விவகாரத்தின் பின்புல விடயங்களையும் பல தகவல்களையும் சட்டத்தரணிகள் சுமந்திரன், சயந்தன் போன்றவர்கள் விலாவாரியாக கூட்டத்தில் விளக்கினர். இந்த விடயத்தில் சரியான ஆலோசனை தரக்கூடிய சுமந்திரன் இருந்தும், அந்த ஆலோசனையை பெறாமல் அரசோடு சேர்ந்து சிறிதரன் வாக்களித்தமை துரதிஷ்டவசமானது என்று கட்சியின் முன்னாள் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான துரைராஜசிங்கம் சுட்டிக் காட்டினார்.

நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றிய – வழமையான – அமைதிப்பார்வையாளர் ஒருவர் இனிமேல் கட்சியின் கூட்டங்கள் ஒழுங்கு முறையாக நடக்கும் என்று நம்பிக்கை பிறந்துள்ளது என்றும், அதற்கேற்ப விடயங்கள் கூட்டத் தலைமையால் நேற்று கையாளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

\+ \+ \+

'கிளீன் சிறிலங்கா', 'கிளீன் சிறிலங்கா' என்று புதிய அரசாங்கம் அதிகம் பிரலாபிக்கின்றது. இந்தக் கிளீன் சிறிலங்கா குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றம் இரண்டு நாள்கள் கூடுகின்றது.

அப்படி நாட்டை – அதன் நிர்வாகத்தை – சட்டம், ஒழுங்கு பேணலை – இந்த அரசாங்கம் என்ன சுத்தம் செய்யப் போகின்றதோ தெரியவில்லை.

ஆனால், அரசின் கிளீன் சிறிலங்காத் திட்டம் தொடர்பாக இரண்டு தகவல்கள் எனக்கு கிடைத்தன. அவற்றை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

முதலாவது தகவல் ராஜபக்ஷக்களுக்கு எதிரான விசாரணை என்ற பெயரில் புதிய அரசு ஆரம்பித்து இருக்கும் விடயம்.

கதிர்காமத்தில் மாணிக்க கங்கை ஆற்று கரையோரத்தில் பெரும்பாலான கட்டமைப்புகள் அரச காணிகளில் அத்துமீறி முன்னெடுக்கப்பட்டவை தான். அத்தகைய ஒரு கட்டுமானத் துடன் ராஜபக்ஷக்களுக்குத் தொடர்பு இருப்பதாக தெரிவித்து மஹிந்தவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷவும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் குற்றப்புலனாய்வுத் துறைக்கு விசாரணைக்கு அழைக்கப் பட்டிருக்கிறார்கள். 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற காணி அபகரிப்பு தொடர்பான விவகாரம் அது என்று கூறப்படுகின்றது.

2004 இல் விடயம் நடந்த போது யோஷித ராஜபக்ஷ பாடசாலை மாணவர். ஜி.சி. ஈ. சாதாரண தரம் எழுதிக் கொண்டிருந்தவர். அந்த காலகட்டத்தில் கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவில். அவர் 2005 ஒகஸ்ட்டுக்குப் பின்னர் தான் நாடு திரும்பி இருந்தார்.

இருவர் மீதும் குற்றம் சுமத்த முடியாத ஒரு விவகாரத்துக்காக இப்போது அவர்களை குற்றப்புலனாய்வுத்துறைக்கு அதிகாரத் தரப்பு அழைத்து விசாரித்து இருக்கின்றது.

இதன் முடிவு சம்பந்தப்பட்ட விடயத் துக்கு அவர்கள் மீது குற்றம்சாட்டவே இடம் இல்லை என்ற பெற்பேறைத்தான் தரும். ஆக, இரண்டு ராஜபக்ஷக்களும் குற்றம் இழைக்காத – குற்றம் சுமத்தப்பட முடியாத – சுத்தவாளிகள், கிளீன் ஆனவர்கள் என்பதை நிரூபிக்கவா இந்த கிளீன் சிறிலங்கா நடவடிக்கை என்று ஒரு நண்பர் கேள்வி எழுப்புகிறார்.

மற்றைய விடயம் வவுனியாவில் இருந்து கிடைத்தது. அரசாங்கம் கிளீன் சிறிலங்கா என்ற பெயரில் அதிகாரிகளின் சொத்து சுவீகரிப்பு பற்றிய விடயங்களிலும் வேவு பார்க்கத் தொடங்கியுள்ளது என்பதை அறிந்து கொண்ட, வவுனியா அதிகாரி ஒருவர் சுதாகரித்துக் கொண்டு தன்னை 'சுத்தவாளி' – 'கிளீன்' ஆன நபர் – என்று காட்டுவதற்கு அதிரடியாக நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக் கின்றார் என்பது பற்றிய தகவல் இது!

வவுனியா மாவட்டத்தின் இந்த மூத்த அதிகாரி அவசர அவசரமாக பல சொத்துக்களை விற்பனை செய்து வருகின்றார்.

மாவட்டத்தின் மூத்த அதிகாரி ஒருவர் நிர்வாக வேலையை விடத் தமது சொந்த வியாபார வேலையிலேயே என்றும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார் என நீண்ட காலமாக விமர்சனமும் இந்த அதிகாரி மீது தொடர்ச்சியாக முன் வைக்கப் பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே மாவட்டத்தின் இந்த அதிகாரி தனது பெயரில் இருந்த நான்கு டிப்பர் வாகனங்களையும், இரு ஜே.சி.பி. இயந்திரங்களையும் அவசர அவசரமாக வந்த விலைக்கு விற்று விட்டார்.

இதே நேரம் இதே அதிகாரியிடம் தற்போது ஒரு ஹயஸ் வாகனமும் ஒரு பெற்றோல் பவுஸரும் இன்னும் கைவசம் உள்ளன.

'கிளீன்' சம்பந்தமாக அரசு தன்னை வேவு பார்க்க முன்பு தாம் தம்மையே கிளீன் செய்து விட்டார், இனி அரசு என்னத்தைப் பிடிக்கப் போகின்றது என் அந்த அதிகாரி தமக்குத் தாமே மெச்சிக் கொள்ளலாம்.

இந்த அரசு மீது அவ்வளவு – அளவு கடந்த – விசுவாசம் வைத்திருக்கும் அவர் எந்த நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றார் என்றும் கூறப்பட்டது.

---

## சாரதி, நடத்துனர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாணவர் குழுவினர், பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனர் மீது தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் நானுஓயா பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேலதிக வகுப்புக்குச் செல்லும் ஒரு சில மாணவர்கள் நுவரெலியாவில் இருந்து நானுஓயா – கிளாரண்டன் நோக்கி குறித்த பஸ்ஸில் வந்தனர். இதன்போது நடத்துனருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக தொலைபேசி அழைப்பின் மூலம் ஏனைய நண்பர்களுக்குத் தெரிவித்து குறித்த பஸ்ஸை கிளாரண்டன் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் வழிமறித்து சாரதி மற்றும் நடத்துனர் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் பலத்த காயமடைந்த இருவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

15 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்றிணைந்து இந்தத் தாக்குதலை நடத்தினர். பஸ்ஸூம் தாக்கப்பட்டு சேதப் படுத்தப்பட்டது.

பஸ்ஸில் நடத்துனர் கையில் இருந்த டிக்கெட் வழங்கும் மின்னனு கருவியையும் அவர்கள் தாக்கிச் சேதப்படுத் தினர்.

தாக்குதல் நடத்திய மாணவர்களில் இருவர் நானுஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஏனையவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் சேதமடைந்த பஸ் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாக நுவரெலியாவில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்தபல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். தெல்லிப்பழையில் நேற்று நடைபெற்ற தேசிய பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

“இலங்கைக்கும் இந்தியாவுக்கு இடையிலான கலாசாரமும் வரலாற்று பிணைப்புகளும் மிகவும் ஆழமானவையாகும். எமது பாரம்பரியம் ஒவ்வொரு அம்சத்தோடும் ஊடுருவி ஒன்றுடன் ஒன்று இணைந்தே வளமான பிணைப்பை உருவாக்குகின்றது.

இந்த ஆழமான பிணைப்பு, தேவைப்படும் காலங்களில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய உறுதியான ஆதரவு மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

நெருக்கடியான சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இந்தியா உதவி செய்தமை நீடித்த நட்புக்கான சான்றாக அமைந்துள்ளது.

இந்திய அரசால் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் என்பன பாதிக்கப்பட்ட சமூகங்களை மேம்படுத்துகின்றன.

நிபந்தனையற்றதும் உறுதியுமான அயல் நாடாகவும் அனைத்து முயற்சிகளிலும் சிறந்த நண்பனாகவும் இந்தியா தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.” – என்றார்.




# அண்ணன் தம்பி உறவு என்று சொல்லிக்கொண்டு எமது வாழ்வாதாரத்தினை அழிக்க முடியாது

### வட மாகாண கடல் தொழிலாளர் இணைய ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(எஸ்.ரகுதீஸ்)

“தமிழ்நாட்டு மக்களுடன் ஒன்றுபட்டு வாழ விட்டுக் கொடுப்புகளையும் செய்வோம். ஆனால், சட்டவிரோத இழுவைமடி தொழிலுக்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஆனால், அண்ணன் தம்பி உறவு என்று சொல்லிக் கொண்டு எமது வாழ்வாதாரத்தை அழிப்பதை அனுமதிக்க முடியாது.”

– இவ்வாறு வட மாகாண கடத்தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அ. அன்னராசா தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை இந்திய மீனவர் பிரச்சனையில் தமிழ்நாட்டு அரசாங்கம் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டும். அண்மையில் இடம்பெற்ற அயலவர் தின நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கடல் தொழில் அமைச்சர் ஆகியோர் இது தொடர்பில் கலந்துரையாடினர் என ஊடகங்கள் மூலமாக அறிந்து கொண்டோம். இதற்கு அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வடக்கு மாகாண கடல் தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பில் தமிழ்நாட்டு அமைச்சருடன் பேச வேண்டும் எனவும் மீனவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என்றும் நேரம் கேட்டிருப்பதாக அறிந்துள்ளோம்.

தமிழ்நாட்டு மீனவர்களினால் வடக்கு மீனவர்கள் நாளாந்தம் பாதிக்கப்படுகின்றார்கள். இது சம்பந்தமாக காலம் தாழ்த்தாது நேரம் தாழ்ந்தது மிக விரைவில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மற்றும் மீன்பிடி அமைச்சர் அனுராதா இராதாகிருஷ்ணன் ஆகியோருடன்டன் கலந்துரையாடி அடுத்த கட்டம் கொண்டு செல்ல நாடாளுமன்ற உறுப்பினர் கவனம் செலுத்த வேண்டும்.

கடல் தொழில் அமைச்சரும் அடுத்தகட்ட மீனவர் பிரச்சனை தொடர்பில் அரசமட்ட பேச்சுவார்த்தை நடத்தி குறிப்பிட்ட கால அவகாசத்தில் இலங்கை – இந்திய மீனவர் பிரச்சனைக்கு சமூகமாக தீர்வு காண அரசும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி பேதம் இன்றி எமது வளத்தையும் வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற விரைந்து செயல்பட வேண்டும். அதற்கு வடக்கு கடல் தொழிலில் சமூகம் தமிழ்நாட்டு மக்களுடன் ஒன்றுபட்டு வாழ்வோம் விட்டுக்கொடுப்புகளை செய்வோம். ஆனால். சட்ட விரோத இழுவைமடித் தொழிலுக்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

ஆனால், அண்ணன் தம்பி உறவு என்று சொல்லிக் கொண்டு எமது வளத்தை அழிப்பதை அனுமதிக்க முடியாது. எனவே அயலவர் தினத்தில் கதைத்த செய்திகள் ஊடகங்கள் வாயிலாக வந்தன. அப்படியே செய்திகளாக இல்லாமல் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அதே போன்று தமிழ்நாட்டு மாண்புமிகு கடத் தொழில் அமைச்சர் அனுராதா இராதாகிருஷ்ணனும் தமிழ்நாட்டு மீனவர்களோடு இணைந்து வடமாகாண மீனவர்கள் படும் துயரத்துக்கு சமூகமான தீர்வை காண தாங்கள் அர்ப்பணித்து ஒரு தீர்வு காண நீங்கள் வடக்குக்கு வர வேண்டும் என்றும் எமது மக்கள் படும் துன்பதுயரத்தை பார்த்து கரிசனை கொள்ள வேண்டும்.

எனவே, வடக்குக்கு வருமாறு உங்களை இரண்டு லட்சம் மக்கள் சார்பாகவும் 50,000 குடும்பம் சார்பாகவும் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து இந்திய இலங்கை மீனவர் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்குமாறு தயவாகக் கொள்கின்றோம். எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேச்சளவில் இல்லாமல் இதற்கு செயல் உருவம் கொடுக்குமாறும் உங்களை கடல் தொழில் சமூகம் கேட்டுக் கொள்கிறது.”– என்றார்.

# இலங்கை – சீன மக்கள் வங்கிகள் நாணய பரிமாற்றல் ஒப்பந்தம் நீடிப்பு



இலங்கை மத்திய வங்கி மற்றும் சீன மக்கள் வங்கிக்கு இடையிலான இருதரப்பு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மூல ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2024 டிசம்பர் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த ஒப்பந்தம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கமைய 10 பில்லியன் சீன யுவான் ஏறத்தாழ சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரஸ்பர பரிமாற்ற வசதியானது சீனா – இலங்கை இடையிலான நிதியியல் ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுவதாக மத்திய வங்கி கூறியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை மத்திய வங்கியின் சார்பாக ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க மற்றும் சீன மக்கள் வங்கியின் சார்பில் ஆளுநர் பேங் காங் ஷெங் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொற்றா நோய் அதிகரிப்பு

பாடசாலை சிறுவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் - வகை 2, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நாள்பட்ட கல்லீரல் மற்றும் நுரையீரல் நோய்கள் போன்ற தொற்றா நோய்கள் அதிகரித்துள்ளன என்ற அபாய எச்சரிக்கையை சிறுவர் நல வைத்திய நிபுணர் ருவந்தி வெளியிட்டிருக்கின்றார்.

12, 14 மற்றும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்களிடையே தொற்று நோய் அல்லாத - குறிப்பாக நீரிழிவு நோய் வகை 2 - அதிகமாக காணப்படுவது கவலை அளிப்பதோடு, அபாய எச்சரிக்கையை தூண்டியுள்ளது என்று அவர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, கல்லீரல் மற்றும் நுரையீரல் நோய்களும் சிறுவர்களிடையே அதிகரித்துள்ளன. சிறுவர்களிடையே உயர் இரத்த அழுத்த நோய் அதிகரித்து வருவது மேலும் கவலை அளிக்கின்றது.

இது சுகாதார அமைப்பில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. அதன்படி, இந்த நிலைமைகள் பொது சுகாதாரத்தில் சவாலை உருவாக்கி வருகின்றன என்று சுட்டப்படுகின்றது.

நீரிழிவு, இருதய நோய்கள், பக்கவாதம் மற்றும் புற்றுநோய்கள் உட்பட தொற்றாத நோய்கள் இலங்கையில் ஏறக்குறைய 90 வீதமான நோய்ச் சுமையைத் தருகின்றன என்ற புள்ளிவிவரப் பின்னணியிலேயே அவற்றின் தாக்கம் சிறுவர்களிடையேயும் கணிசமான அளவு பாதிப்பைத் தரத் தொடங்கிவிட்டன என்ற எச்சரிக்கை வெளியாகியிருக்கின்றது.

இந்த நோய் நிலைமைகளை குறைப்பதற்கு, சிறுவர்களுக்கு தேவையான சுகாதார அறிவை வழங்குவதன் மூலம் உடலுக்குத்தீங்குவிளைவிக்காத ஆரோக்கியமானவற்றை தெரிவு செய்ய அவர்களுக்கு உதவ முடியும். அத்தோடு, நோய்கள் அதிகரிப்பதை குறைக்க முடியும் என்று சுட்டப்படுகின்றது.

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்கள், உடற்பயிற்சி இன்மை மற்றும் பிற நடத்தை மாற்றங்கள் உள்ளிட்ட வாழ்க்கை முறை மாற்றங்களே நோய்கள் அதிகரிப்புக்கு காரணமாகும். இந்த நோய்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அதிகரிப்பதைத் தடுப்பதற்கும் பாடசாலை சிறுவர்களிடையே சுகாதார விழிப்புணர்வு மற்றும் கல்வி அறிவை அதிகரிப்பதில் சுகாதார அதிகரிகள் கவனம் செலுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

ஆயினும், சிறுவர்களிடையே - குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே - தொற்றா நோய்ப் பாதிப்பு தீவிரமடைந்து வருவது குறித்த விடயத்தை வெறுமனே சுகாதார அதிகாரிகளும், சுகாதாரத் திணைக்களமும், கல்வி அதிகாரிகளும், பாடசாலை நிர்வாகிகளும், ஆசிரியர்களும் மட்டும் இணைந்து கையாண்டு வெற்றிகொண்டு விட முடியாது.

அதையும் தாண்டி, இவ்விடயம் ஒரு சமூக செயற்பாடாக, போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கூட்டு முயற்சியில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சுகாதாரத் துறையினர், கல்வித் துறை நிர்வாகிகள், பாடசாலை சமூகம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் கூட்டாகச் சேர்ந்து திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலமே பாடசாலை மாணவர்கள் இடையே தீவிரமடைந்து வரும் தொற்றா நோய் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியும்.

இதற்கான சமூகச் செயற்பாடு திட்டமிட்ட முறையில் உயர் கவனிப்புடன் கூட்டாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

விடயத்தைக் கையாளத் தனியான துறை ஒன்றை அரசு உருவாக்கி முன்னெடுப்பது கூட பொருத்தமானதாக இருக்கும்.

ஆரோக்கியமான அடுத்த தலைமுறைதான் நாட்டைசொப்பனிட்டு, சீர்படுத்த மிக முக்கியமானது. அதை நாம் மறந்து விடக்கூடாது.



# புதிதாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் 9000 பேரை நியமிக்க நடவடிக்கை

புதிதாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் 9000 பேரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு தேவையான நிதி மற்றும் ஏனைய வசதிகளை அரசாங்கம் வழங்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது சுமார் 75,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் போக்குவரத்து கட்டுப்பாடு, குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு என்பனவற்றுக்காக கடமையாற்ற வேண்டுமென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள தற்போதைய அதிகாரிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதமையால் புதிய பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க தீர்மானித்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.







# ஆளுமை மிக்க சந்ததியின் உருவாக்கமே எம் இனத்தின் இருப்பை உறுதி செய்யும்!

## தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு

ஆளுமை மிக்க அடுத்த சந்ததியின் உருவாக்கமே எமது இனத்தின் இருப்பை உறுதி செய்யும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பளைக் கோட்டத்துக்குட்பட்ட கிளிஃபேராலை சி.சி.த.க.பாடசாலையின் புதிய களஞ்சிய அறைத் திறப்பு விழா பாடசாலை அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்கால இளைய சமூகம் மீது ஏற்பட்டிருக்கும் அதிருப்திகளின் பின்னணி என்பது, சமூகம் குறித்த சீரிய பார்வை நோக்கியும், பொதுநலன் சார் சிந்தனை நோக்கியும் அவர்களின் மன உலகு விரிவடையாமையினால் ஏற்பட்டதே. அத்தகைய சமூகப் பிறழ்வு நடத்தைகளிலிருந்து எமது அடுத்த சந்ததியை மீட்சியுறச் செய்ய வேண்டிய காலக்கடமையின் பெரும் பங்கு பாடசாலைகளுக்கு உண்டு.

அந்தவகையில் தனிமனித நடத்தை மற்றும் வாண்மை விருத்திக்கான வாசல்களைத் திறப்பதன் மூலம் உருவாக்கப்படும் ஆளுமை மிக்க அடுத்த சந்ததியின் மூலமே எமது இனத்தின் இருப்பை உறுதி செய்ய முடியும்." – என்றார்.

மேற்படி களஞ்சிய அறை நிர்மாணத்துக்கான நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# 24 மணித்தியாலங்களில் 2,293 கொள்கலன்கள் விடுவிப்பு

கடந்த 24 மணி நேரத்தில் 2,293 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று காலை 6.30 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேரத்திற்குள் இந்தக் கொள்கலன்கள் பிரதான முனையத்திலிருந்து விடுவிக்கப்பட்டன என அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது

இதற்கிடையில், இலங்கை சுங்கத்தால் அகற்றப்பட்டு துறைமுக வாயில்கள் வழியாக 2,074 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், முனையங்களை விட்டு வெளியேறும் அளவை விட வாயில்களில் இருந்து வெளியேறும் அளவு குறைவாக இருப்பதால் கொள்கலன் நெரிசல் குறையவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு , துறைமுகத்தில் சிக்கிய கொள்கலன்களில் ஒரு குறிப்பிட்ட அளவை உரிய நேரத்தில் விடுவிக்க துறைமுகம் மற்றும் சுங்கத் துறைகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# நாட்டில் உற்பத்தி, சேவை நடவடிக்கைகள் அதிகரிப்பு

நாட்டில் உற்பத்தி மற்றும் சேவை நடவடிக்கைகள் கடந்த டிசம்பர் மாதத்தில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

புதிய கொள்வனவு கட்டளைகள், உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, உற்பத்தித் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 57.2 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சேவைத் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 71.1 ஆக சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.




# தமிழ்த் தேசிய அரசியலைக் காப்பது ‘படம்’ காட்டுதல் விவகாரம் அல்ல!



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய அரசியல் செல்நெறி பேஸ்புக் பதிவுகள், செல்பி படங்கள், லைவ் வீடியோக்களுக்குள் சிக்கிக் கொள்ளத் தொடங்கிவிட்டதோ என்று அச்சம் எழுகின்றது. யாழ்ப்பாணத்தில் திடீரென வைத்தியர் ஒருவர், பேஸ்புக் லைவ்கள் – ரிக்ரொக் சண்டைகளின் வழியாகப் பெற்ற பிரபலத்தினால் நாடாளுமன்ற உறுப்பினராகிவிட்டார். அந்த வைத்தியரின் சுயேச்சைக் குழுவுக்குள் அவருக்கு அடுத்து வந்த இளம் சட்டத்தரணிக்கு, தமிழ்த் தேசியம் பேசி நாடாளுமன்றம் சென்றிருக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களை விட விருப்பு வாக்குகள் அதிகம். இது, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை சமூக ஊடகத்தின் பரபரப்பு – கவனக் கலைப்பான் செல்நெறிக்குப் பின்னால் தள்ளியுள்ளதாக கருத வேண்டியிருக்கின்றது. எங்கு சென்றாலும், யாரைச் சந்தித்தாலும் அவற்றைப் படங்கள் எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்தால் போதும் என்ற அளவுக்கு அப்பாலான நடைமுறை அணுகுமுறை அரசியல் முன்னேற்றங்கள் தொடர்பிலான எந்தவித முன்னேற்றங்களையும் எந்த அரசியல்வாதியும் பதிவு செய்கிறார்கள் இல்லை. அது போல, ஒரு சந்திப்பிற்கு பின்னரான அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்பது பூச்சியமாகவே இருக்கின்றது. அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் தொடர்பில் யாரும் கேள்வி எழுப்புவதில்லை. ஏன், பாரம்பரிய ஊடகங்கள் கூட அவை தொடர்பில் அக்கறை கொள்வதில்லை. இந்த அரசியல்வாதி அவரைச் சந்தித்தார் என்ற அளவில் படங்களை பதிவதோடு ஊடகங்களும் அவற்றைக் கடந்துவிடுகின்றன. இந்த நிலையால், அரசியல் இராஜதந்திர சந்திப்புக்கள் என்பன பேஸ்புக்கில் படங்களை பதிவதற்கான ஒரு செயற்பாடு என்கிற அளவில் சுருங்கிவிட்டது. இந்தப் படங்களை வைத்து ஒன்றிரண்டு நாள்கள் சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் தொண்டர்களும், எதிர்த்தரப்பினரும் சண்டையிடுவதோடு அடுத்த படத்துக்காக, லைவ் வீடியோக்களுக்காக காத்திருக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இந்த அளவினை மீறி ஆக்கபூர்வமான செயற்பாடுகள் என்று எவற்றையும் யாரும் வெளிப்படுத்துகிறார்கள் இல்லை.

அண்மையில், தமிழ்நாடு அரசாங்கத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் அனைத்துலக தமிழர் ஒருங்கிணைப்பு விழாவில் யார் யாரோடு படம், செல்பி எடுப்பது என்பது தொடர்பிலான போட்டி இடம்பெற்றது. முதல்வர் ஸ்டாலினுடன் நின்று எப்படியாவது ஒரு படம் எடுத்து, அதனை தங்களின் பெரிய அரசியல் அடைவு மாதிரி காட்டி, தங்களின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்திவிட வேண்டும் என்பதில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முண்டியடித்தனர். அதில், சிலர் வெற்றி பெற்றனர் என நினைத்து, ஸ்டாலினுடன் எடுத்த செல்பியை பகிர்ந்து புளகாங்கிதம் அடைந்து கொண்டார்கள். இன்னும் ஒருசில அரசியல்வாதிகள், தங்களின் பெயர்தான் அழைப்பிதழில் இருக்கின்றது என்று தலையால் நடந்தார்கள். ஆனால், தமிழ்நாடு சென்ற எந்த தமிழ் அரசியல்வாதியும், ஸ்டாலின், உதயநிதி போன்றவர்களுடன் சந்திப்புக்கள் ஏதாவது நடத்தினார்களா, அதில் என்ன விடயங்களைப் பேசினார்கள் என்றோ கூறுவதற்கு தயாராக இல்லை. தமிழ்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களினால் வடக்கு மீனவர்கள் நாளும் பொழுதும் அல்லற்

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசிய அரசியலைக் காப்பது ‘படம்’ காட்டுதல் விவகாரம் அல்ல!




தொடர்ச்சி▲

பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது தொடர்பில் ஏதாவது நடவடிக்கை எடுக்குமாறு ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. சென்னையில் ஸ்டாலினின் முகம் கோணாமல் நின்று செல்பி எடுப்பதோடு விடயத்தை முடித்துவிட வேண்டும் என்பதில்தான், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் குறியாக இருந்தார்கள். இதில், வேடிக்கை என்னவென்றால் நாளும் பொழுதும் இந்தியாவையும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்களையும் விமர்சிக்கும் தேசிய மக்கள் சக்தியின் பெயரில் நிற்கும் ஜே.வி.பி.யின் அமைச்சரான சந்திரசேகரன் கூட, தமிழ்நாட்டில் அமைதியின் பேருருவமாக மாத்திரம் இருந்துவிட்டு வந்திருக்கிறார். அவர், கடற்றொழில் அமைச்சர், தொடர்ச்சியாக வடக்கில் முகாமிட்டிருப்பவர். தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் பெற்ற வெற்றியில் மீனவ சமூகத்தின் வாக்குகள் கணிசமான தாக்கத்தைச் செலுத்தின. ஆனால், அவர் சென்னையில் தமிழ்நாட்டு மீனவர்களினால் வடக்கு மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பேசிய காட்சிகள் ஏதும் இல்லை. உள்ளூரில் வீராதி வீரன் கதைகளை அவிழ்த்துவிட்டு படம் காட்டும் இவர்கள், சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் முன்னிலையில் நல்ல பிள்ளைகளாக மாத்திரம் நடந்து கொள்கிறார்கள்.

தமிழ்நாட்டு ஆட்சியாளர்களையோ, அரசியல்வாதிகளையோ தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளோ, தரப்புக்களோ எதிர்நிலையில் வைத்துக் கொண்டு அரசியல் செய்ய வேண்டும் என்று இந்தப் பத்தியாளர் கூறத் தலைப்படவில்லை. ஆனால், அவர்களின் கட்சித் தொண்டர்கள் வெளிப்படுத்தும் அடிமை உணர்வை, நீங்களும் பிரதிபலிக்கத் தலைப்படும்போதுதான், பிரச்சினை எழுகின்றது. சம்பிரதாயபூர்வ நிகழ்வாக ஒவ்வொரு ஆண்டும் அனைத்துலக தமிழர் ஒருங்கிணைப்பு விழாவை, ஸ்டாலின் அரசாங்கம் நடத்துகின்றது. அதில், அந்த அளவில் மாத்திரம் கலந்து கொண்டோம் என்று இங்கிருந்து சென்ற தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் விடயத்தினை கடந்திருந்தால், தேவையற்ற விமர்சனங்கள் எழுந்திருக்காது. மாறாக, ஸ்டாலினுடன் படம் எடுப்பதை, பெரிய அரசியல் அடைவு மாதிரி காட்டும்போதுதான் அவை பற்றி பேச வேண்டி வருகின்றது. தமிழ்நாட்டு ஆட்சியாளர்களோடோ, இந்திய மத்திய ஆட்சியாளர்களோடோ முரண்பட்டு முறுகிக் கொண்டு நிற்க வேண்டியதில்லை. அது, அரசியல் இராஜதந்திர ரீதியில் பெரிய பின்னடைவுகளை தமிழ் மக்களுக்கு வழங்கவும் செய்யும். அதற்காக, அவர்களின் அடிமைகளாகவும் இருக்க வேண்டியதில்லை. அப்படித் தொடர்ச்சியாக செயற்பட்டதன் விளைவை, வடக்கு கிழக்கு தற்போது சந்தித்து நிற்கின்றது. அதிலும் வடக்கில் இந்தியாவின் தலையீடுகள் என்பது சின்னச் சின்ன விடயங்களில் எல்லாமும் நிகழ்கின்றது. தங்களுக்கான முகவர்களை தமிழ்த் தேசியக் கட்சிகள், தரப்புக்கள், அரசியல் பத்தியாளர்கள் தொடங்கி அனைத்துப் பக்கத்திலும் இந்தியா வைத்துக் கொண்டு பிரித்தாளும் சூழ்ச்சியை செய்து கொண்டிருக்கின்றது. நியாயமான விமர்சனங்களைக்கூட அது வெளியான அடுத்த நொடியே, துணைத் தூதரகங்கள், அரசியல் பிரிவுப் பொறுப்பாளர்களுக்கு போட்டுக் கொடுக்கும் தரப்பினர், அதிகரித்துவிட்டனர். இவ்வாறான நிலையின் அடுத்த கட்டங்களை நோக்கி, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இன்னும் படுவேகமாக சென்று கொண்டிருக்கிறார்கள். இந்தியாவுடனோ, இன்னொரு நாட்டு இராஜதந்திரிகளுடனோ பேசுவது தப்பில்லை. ஆனால், அவை பெரிய வெற்றியாக சமூக ஊடக வெளிச்சத்துக்காக கையாளப்படுகின்றன. கிட்டத்தட்ட வெளிநாடுகளின் தூதுவர்கள் தங்களைவிட பெரிய ஆளுமையுள்ளவர்கள் போன்ற உடல்மொழியை தமிழ்த் தலைவர்கள் தொடர்ச்சியாக பதிவு செய்கிறார்கள். இந்த மனச்சிக்கலை தமிழ்த் தேசியக் கட்சிகளும் தரப்பினரும் முதலில் கடந்து நின்று விடயங்களை அணுகத் தொடங்க வேண்டும். இல்லையென்றால், படம் காட்டுதல் மாத்திரந்தான் அரசியல் என்கிற அளவில் விடயங்கள் சுருங்கத் தொடங்கிவிடும். அது, ஆதரவாளர்களுக்கு மனப்பூரிப்பை வழங்க உதவலாம். ஆனால், தொடர்ச்சியாக தமிழ்த் தேசிய அரசியல் மீது ஏதோவொரு நம்பிக்கையில் பற்றிக் கொண்டிருக்கும் பெரும்பான்மை தமிழ் மக்களை,சலிப்படைய வைக்கும். அது, தேசிய மக்கள் சக்தி போன்ற அரசியல் இயக்கங்களையும், வைத்தியர் போன்ற கவனக் கலைப்பான்களையும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்குள் மீண்டும் எழ வைக்கும்.

கவனக் கலைப்பான் அரசியலை நோக்கி மக்கள் ஏன் சென்றார்கள் என்பது தொடர்

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசிய அரசியலைக் காப்பது ‘படம்’ காட்டுதல் விவகாரம் அல்ல!

தொடர்ச்சி▲

பில் தமிழ்த் தேசிய கட்சிகளோ, தரப்பினரோ சிந்திப்பது மாதிரித் தெரியவில்லை. மாறாக, கவனக் கலைப்பான்களின் அரசியல் செல்நெறியை பின்பற்றுவது தொடர்பில் அக்கறை கொள்வது என்பது பெரும் அபத்தமாகும். குறிப்பாக, கவனக் கலைப்பான் அரசியலுக்கு பின்னால், வடக்கு மக்களில் ஒரு பகுதியினரே சென்றிருக்கிறார்கள். கிழக்கு மக்கள், கருணா – பிள்ளையான் என்கிற கடந்த கால கவனக் கலைப்பான்களையே புறந் தள்ளியிருக்கிறார்கள். அவர்கள், தமிழ்த் தேசியத்தின் வேர்களை உறுதிப்படுத்தும் அரசியலில் கவனம் செலுத்தி, கிழக்கிலிருந்து நேரடியாக ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பியிருக்கிறார்கள். தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொடு தேசியப் பட்டியல் ஆசனமும், கிழக்குப் பெற்றுக் கொடுத்தது. வடக்கில் தமிழரசுக் கட்சி பெற்ற வாக்குகளை வைத்து எதனையும் பெற்றிருக்க முடியாது. வடக்கில் கவனக்கலைப்பான்களின் பின்னால், கணிசமான மக்கள் சென்றமைக்கான காரணங்களை ஆய்ந்து அறிந்து கொள்வதுதான் முதலில் செய்யப்பட வேண்டியது. எந்தப் பகுதி மக்களை தேசிய மக்கள் சக்தியும், வைத்தியர் குழுவும் வெற்றி கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து, எந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது அவர்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள் என்பது தொடர்பில் அறிந்து கொள்முயன்றிருக்க வேண்டும். ஆனால், அதனை எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியும் செய்யவில்லை. பொதுத் தேர்தல் முடிந்து விட்டது, இனி அடுத்து வரும் தேர்தல் காலங்களில் மாத்திரம் தான் மக்களை நேரடியாகச் சந்தித்து விடயங்களை அணுகுவோம் என்பது தொடர்ச்சியான தோல்விகளை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வழக்கும். யாழ். மைய அரசியல்தான் தமிழ்த் தேசியத்தின் அடித்தளம் என்கிற பொய்மையை தொடர்ந்தும் பேணும் நோக்கத்தில் சில தரப்புக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை, தங்களுக்குள் பேசிக் கலைதல் அல்லது ஏதாவது கூட்டத்தைப் போட்டு மாறி மாறி ஒலிவாங்கிகளை களைப்படைய வைத்தால் போதும் என்ற அளவில்தான் இருக்கின்றது. அல்லது, ஊடகங்களில் எழுதியும் பேசியும் விட்டால் போதும் என்று நினைக்கின்றனர். தங்களின் கடந்த காலச் செயற்பாடுகளின் படுதோல்விகள் தொடர்பில் அவர்கள் யாரும் கவனத்தில் எடுக்கிறார்கள் இல்லை. மீண்டும் மீண்டும் பொய்களின் மீது கோட்டைகளைக் கட்டுகிறார்கள். இந்த நிலையும் சேர்ந்துதான், தமிழ்த் தேசியக் கட்சிகளையும், தரப்புக்களையும் கவனக் கலைப்பான்கள் முன்னிலையில் மூக்குடைபட்டு விழக் காரணமாக அமைந்துவிடுகின்றது. இந்த நிலை தொடர்ந்தால், தோல்வியின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்று, தமிழ்த் தேசிய அரசியலின் இருப்பை வடக்கிலிருந்து காலி செய்துவிடும்.




தமிழ்த் தேசிய அரசியலுக்குள் நடத்தப்படும் உரையாடல்கள் யாழ்ப்பாணத்தை அல்லது வடக்கினை மாத்திரம் மையப் படுத்தித்தான் அதிகம் நிகழ்கின்றன. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இல்லையென்றால், தமிழ்த் தேசிய அரசியலின் போக்கு கடந்த தேர்தலில் தோல்வி முகத்தில் முடிந்தது போன்று, கறுப்பு வரலாறு தொடர் நிகழ்வுகளாக மாறிவிடும். விடயங்களை அதன் தன்மைகளை உணர்ந்து, அந்தந்தப் பிரதேசத்தின் தேவைகள், பலம் பலவீனங்களை அறிந்துதான் அணுகப்பட வேண்டும். முதலில் அந்த உணர்நிலைக்கு தமிழ்க் கட்சிகளும், தலைவர்களும், தரப்பினரும் வர வேண்டும். அப்படிச் செய்வதுதான், பிரச்சினைகளின் ஆழத்தை முழுமையாக அறிந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவும். இல்லையென்றால், சமூக ஊடக வெளிச்சத்துக்குள் அரசியலை தொலைப்பதோடு விடயங்கள் முடிவுக்கு வரும். வைத்தியர் போன்ற கவனக் கலைப்பான்களை இலகுவாக கடந்துவிடலாம். ஏனெனில், அது யாழ்ப்பாணத்துக்குள் நிகழ்ந்திருக்கும் ஓர் அபத்தம். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் தமிழ் தேசிய நிலப்பரப்பினை நோக்கிய படையெடுப்பு, தமிழ்த் தேசிய அரசியலுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும். ஏனெனில், தேசிய மக்கள் சக்தி, சாதாரண மக்களின் ஆணையைப் பெற்ற ஆட்சியாளர்கள் என்று சொல்லிக் கொண்டாலும், அது கடந்த கால பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களின் தொடர்ச்சி என்பதற்கான காட்சிகளையே

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசிய அரசியலைக் காப்பது ‘படம்’ காட்டுதல் விவகாரம் அல்ல!

**தொடர்ச்சி▲**

காட்டிக் கொண்டிருக்கிறது. தமிழ் அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்று அறிவிப்பது முதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரயோகம், இனப் பிரச்சினை என்று ஏதுமில்லை, தமிழ் மக்கள் சந்திப்பது பொருளாதாரப் பிரச்சினை என்று அறிவிப்பது வரையில், தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறை என்பது தமிழ்த் தேசிய அரசியலுக்கு தொடர் அச்சுறுத்தலானது. அதனை, கடந்த பொதுத் தேர்தலோடு கடந்துவிடலாம் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளும், அதன் தலைவர்களும் நினைத்தால், மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். ஏனெனில், தேசிய மக்கள் சக்தியினர் வடக்கு கிழக்கில் கிராமங்கள் வரையில் தங்களின் செயற்பாட்டு அரசியலை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை வெகு விரைவாக முன்னெடுக்கின்றனர். சில மாதங்களுக்குள்ளேயே, ஒவ்வொரு பிரதேசத்தின் தன்மையை உணர்ந்து அரசியல் செயலகங்களை திறக்கிறார்கள். அதனை, செயற்பாட்டு அளவிலும் வைத்துக் கொள்கிறார்கள். இது, கால ஓட்டத்தில் இன்னும் இன்னும் வேகமாக தேசிய மக்கள் சக்தியை நோக்கில் மக்களை இழுத்துச் செல்லும். இந்த ஆபத்துக்களை உணராமல், பேஸ்புக்கில் படங்களைப் போடுவதிலும், சண்டை பிடிப்பதிலும் கவனம் செலுத்தி தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தமிழ்த் தேசிய அரசியலை தென் இலங்கையிடம் தொலைத்துவிடாதீர்கள். முதலில், கொஞ்சமாவது கண்களைத் திறந்து நின்று கள அரசியலைக் கவனியுங்கள்.



# தேயிலைத் தோட்டப் பள்ளத்தில் பாய்ந்து வீழ்ந்து ஓட்டோ விபத்து

## சாரதி உட்பட மூவருக்குப் படுகாயம்

**(ஆ.ரமேஸ்)**

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லபுக்கலை தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் நேற்று மாலை 05 மணியலவில் இடம்பெற்ற ஓட்டொ விபத்தில் சாரதி உட்பட அதில் பயணித்த மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கொழும்பிலிருந்து நானு ஓயா எடிம்பரோ தோட்டத்தை நோக்கி பயணித்த ஓட்டோ கண்டி – நுவரெலியா வீதியில் லபுக்கலை தோட்ட தொழிற்சாலைக்கு அருகில் பிரதான வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் தேயிலை தோட்டத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகியது.

இந்த விபத்தில் சிக்கி பலத்த காயமடைந்த சாரதி உட்பட மூவரை பொது மக்கள் காப்பாற்றி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்தனர்.

அதேநேரத்தில் விபத்து தொடர்பான விசாரணையை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். ஓட்டோவில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விபத்து சம்பவித்ததாக சம்பத்தில் காயமடைந்த சாரதி தெரிவித்தார்.

# கொல்கத்தா மருத்துவர் கொலையில் சஞ்சய் ராய் குற்றவாளி என தீர்ப்பு

## 20 ஆம் திகதி தண்டனை அறிவிப்பு





கொல்கத்தா ஆர்.ஜி.கார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி மருத்துவரை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்த வழக்கில் சஞ்சய் ராய் என்பவர் குற்றவாளி என்று சீல்டா மாவட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தண்டனை விவரங்களை எதிர்வரும் 20 அம திகதி அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பெண் பயிற்சி மருத்துவர் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார். அவரது உடலில் 25 இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், கழுத்து நெரிக்கப்பட்டதால் மூச்சு திணறி உயிரிழந்துள்ளார் எனவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய் ராய் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட பெண் மருத்துவரின் பெற்றோரும் நீதிமன்ற வளாகத்தில் இருந்தனர்.

நீதிபதி அனிர்பன் தாஸ் தனது தீர்ப்பில், சி.பி.ஐ. முன்வைத்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய் ராய் குற்றவாளி என்று தீர்ப்பளித்துள்ளார். பி.என்.எஸ். பிரிவுகள் 64, 66 மற்றும் 103(1) இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி. இதற்கு அதிகபட்சமாக மரண தண்டனையும், குறைந்தபட்சமாக ஆயுள் தண்டனையும் இருக்கும் என்று அறிவித்தார்.

அப்போது, "நான் இதைச் செய்யவில்லை. இதைச் செய்தவர்கள், ஏன் கைது செய்யப்படவில்லை?" என்று சஞ்சய் ராய் நீதிமன்றத்தில் கூறினார்.

ஒக்டோபர் 7, 2024 அன்று இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர், சீல்டாவில் உள்ள கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் தினசரி விசாரணையை நடத்தியது. விசாரணை தொடங்கி 57 நாள்கள் நிறைவு பெற்ற நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

கொல்கத்தா பெண் பயிற்சி மருத்துவர் கூட்டு துஷ்பிரயோக கொடுமைக்கு ஆளாகவில்லை. ஒரே குற்றவாளி சஞ்சய் ராய் என்று சி.பி.ஐ. ஆரம்பத்தில் இருந்து கூறி வருகிறது.

# சிவகங்கை - கண்டிப்பட்டி மஞ்சுவிரட்டு: மாடு முட்டி ஒருவர் பலி; 165 பேர் காயம்



சிவகங்கை அருகே கண்டிப்பட்டி மஞ்சுவிரட்டில் 900 இற்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. மாடு முட்டியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 165 பேர் காயமடைந்துள்ளனர்.

சிவகங்கை அருகே கண்டிப்பட்டியில் பழமையான புனித அந்தோணியார் ஆலயம் உள்ளது. இங்கு மத ஒற்றுமையைப் போற்றும் வகையில் கிறிஸ்தவர்கள், இந்துக்கள் இணைந்து ஆண்டுதோறும் தை 4 ஆம் நாள் பொங்கல் விழாவும், தை 5 ஆம் நாள் மஞ்சுவிரட்டும் நடத்துகின்றனர். அதன்படி நேற்று முன்தினம் பொங்கல் விழா நடைபெற்றது. தொடர்ந்து மெழுவர்த்தி ஏந்தி வழிபாடு நடத்தினர். மாலையில் சப்பரப்பவனி நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற மஞ்சுவிரட்டைக் காண வெளியூர்களில் இருந்து வந்தவர்களுக்கு கிராம மக்கள் போட்டி, போட்டு விருந்தளித்தனர். தொடர்ந்து புனித அந்தோணியார் ஆலயத்தில் இருந்து கோயில் காளையை மஞ்சுவிரட்டு தொழுவுக்கு ஊர்வலமாக மேள தாளத்துடன் கிராமமக்கள் அழைத்து சென்றனர்.

தொடர்ந்து கோயில் காளை அவிழ்த்துவிட்டதும் ஒன்றன்பின் ஒன்றாக மொத்தம் 137 காளைகள் அவிழ்க்கப்பட்டன. 45 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். காளைகளை அடக்கிய வீரர்களுக்கும், அடக்க முடியாத காளைகளின் உரிமையாளர்களுக்கும் பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக கண்மாய் பொட்டல், வயல்வெளிப் பகுதிகளில் 800 இற்கும் மேற்பட்ட மாடுகள் அவிழ்த்துவிடப்பட்டன. மாடுகள் முட்டியதில் பார்வையாளர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மாடுகள் முட்டியதில் 165 பேர் காயமடைந்தனர். மேலதிக சிகிச்சைக்காக சிவகங்கை, மதுரை அரசு மருத்துவமனைகளுக்கு 42 பேர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மற்றவர்களுக்கு அங்குள்ள முகாமில் சிகிச்சை அளிக்கப்பட்டது. மஞ்சுவிரட்டை சுற்றுப் பகுதிகளைச் சேர்ந்த பல ஆயிரம் பேர் வாகனங்களில் ஏறி நின்று ரசித்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ்ராவத் தலைமையில் 300 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.






# காஸாவில் இன்று முதல் போர் நிறுத்தம் ஆரம்பம்

காஸா எல்லையில் இன்று காலை 8.30 முதல் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கை நேரப்படி இன்று நண்பகல் 12 மணிக்கு பின்னர் பணயக்கைதிகள் மற்றும் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களுக்கான பரிமாற்றம் இடம்பெறுமென கட்டார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் வகித்தன.

இது 3 கட்டங்களாக செயற்படுத்தப் படுத்தப்படவுள்ளது.

முதல்கட்டமாக 6 வாரங்களுக்கு போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அந்த காலப்பகுதியில் ஹமாஸ் தரப்பிலிருந்து 33 இஸ்ரேலிய பணயக் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளதுடன், இவர்களில் பெண்கள், குழந்தைகள், இராணுவ வீரர்களும் அடங்குகின்றனர்.



இதனிடையே இஸ்ரேலில் இருந்து 737 பலஸ்தீனர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். இதற்கான பட்டியலும் தயாராகியுள்ளது.

இந்தப் பட்டியலில் Popular Front for the Liberation of Palestine அமைப்பின் முக்கியத் தலைவர் புஷ்ரா அல் தவில் (Bushra al-Tawil) இடம்பெற்றுள்ளார்.

மேலும் பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத், இயக்கத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இருதரப்பிலிருந்தும் இன்று மாலை 4 மணி அளவில் பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டதுடன் 251 பேர் வரை பணயக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதனையடுத்து ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டதில் தாக்குதலால் காஸாவில் 46,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

## உக்ரைனில் வான் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்!



உக்ரைனின் மத்திய பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய விமானப்படையினர் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதலின் போதே அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து உக்ரைனில் வான் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள் என என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## ஈரான் துப்பாக்கிச்சூட்டில் இரு நீதிபதிகள் உயிரிழப்பு



ஈரான் தலைநகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரு நீதிபதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

தெஹ்ரானில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இதன்போது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர் சம்பவ இடத்திலேயே தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.01.2025




உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமான வர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உருவாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது




வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒரு முறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகுமுறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக் கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவை யற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவ லையை அளிக்கும்.

சளி அல்லது முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவன மாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர் களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத் திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன் ஆற்றுவீர்கள். உங்கள் செயல்திறன் நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப் பதற்க்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள திட்டங்களில் முதலீடு செய்வீர்கள்.




இன்று காணப்படும் பதற்றத்தை சமாளிக்க சமநிலையான அணுகுமுறை தேவை. திருதியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர் வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




இன்று தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படு வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

பாதுகாப்பற்ற நிலை காரணமாக தலைவலி உயர முத்தம் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாவீர்கள்.




இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது.




இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறு வீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணி களை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறை யான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மையா கவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தி யான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணியாளர் களின் கவனத்தை இரிக்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் திருப்தியான உணர்வு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.01.2025




ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் நல்லது.

பயணத்தின்போது பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள்.உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் சமயோசித புத்தி இன்றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மனநிலை உங்கள் பணியில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். லாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# வவுனியா நெளுக்குளம் பகுதியில் நேற்று 12 வாகன பற்றரிகளுடன் ஒருவர் கைது!






(கி.வசந்தன்)

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் 12 வாகன பற்றரிகளை மகேந்திரா ரக வாகனத்தில் ஏற்றிச் சென்ற ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளமையுடன், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர் என நெளுக்குளம் பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே. திவுல்வெவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் நெளுக்குளம் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போதே மேற்படி மகேந்திரா ரக வாகனத்தை சோதனைக்குட்படுத்திய போது வாகனத்தில் 12 வாகன பற்றரிகளை அவர்கள் கண்டுபிடித்தனர். இதனையடுத்து அந்த வாகன பற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனத்தின் சாரதியை கைது செய்தமையுடன், அவ் வாகனத்தினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாகன உரிமையாளர்கள் பற்றரிகள் எவையும் களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் உடனடியாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ முறைப்பாட்டினை வழங்குமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த நான்கு வாரத்திற்கு முன்னர் வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடம் ஒன்றில வாகன பற்றரிகளை களவாடிய குற்றச்சாட்டில் நான்கு வாகன பற்றரிகளுடன் இருவரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்தமையும் குறிப்பிடத்தக்கது.